# சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை

## சிறந்த பெண் குழந்தைக்கான விருது

அரசாணை (ப) எண். 110, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை, நாள்.19.07.2023 படி, ஒவ்வொரு ஆண்டும் "பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் ஜனவரி-24 அன்று மாநில அரசின் விருதாக பாராட்டு பத்திரமும், ரூ.1.00/-(ரூபாய் ஒரு இலட்சம்) இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டு பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பங்காற்றும் 13 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24 அன்று விருது வழங்கப்படவுள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் உள்ளவாறு, தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (**https://awards.tn.gov.in**) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 16.12.2023 முதல் 31.12.2023 வரை பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">தகுதிகள்</td><td>1. 13 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை (31 டிசம்பர் -ன் படி)</td></tr>
<tr><td>2. கீழ்கண்டவற்றில் வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டும்.<br>• பிற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல்<br>• பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு<br>• பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல் மற்றும் தவிர்த்தல்<br>• வேறு ஏதாவது வகையில் சிறப்பான/ தனித்துவமான சாதனை செய்திருத்தல்<br>• பெண்களுக்கு எதிரான சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் ஆகிவற்றிற்கு தீர்வு காண்பதற்கு ஓவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாகவோ விழிப்புணர்வை ஏற்படுத்தியிருத்தல்<br>• ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | விருது | மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் மேற்காண் அம்சங்களில் சிறந்து விளங்கும் ஒரு பெண் குழந்தை தேர்ந்தெடுக்கப்பட்டு,<br>1. ஒரு பாராட்டு பத்திரம்<br>2. ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை வழங்கப்படும். |
| 3. | தேர்வுக் குழு | மாநில அளவிலான தேர்வுக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்ந்து மேற்காண் விருதினை பெற உரிய நபரை தேர்ந்தெடுக்கப்படுவார். |
| 4. | விருதிற்கான முன்மொழிவுகள் | மேற்காண் விருதினை பெற உரிய முன்மொழிவுகளை முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மாவட்ட திட்ட அலுவலர், காவல்துறை மற்றும் குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்கள் ஆகியோர்களிடம் விபரமறிந்து பரிந்துரைக்கலாம்.<br>பரிந்துரையில் குழந்தையின் பெயர், தாய்/தந்தை முகவரி, ஆதார் எண், புகைப்படம், ஆகியவற்றுடன் குழந்தை ஆற்றிய அசாதாரண வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றின் ஒரு பக்கத்திற்கு மிகாத குறிப்பு மற்றும் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்படவேண்டும். |

**2024-ஆம் ஆண்டு பெண் குழந்தைகள் தின மாநில விருதுக்கு**

**விண்ணப்பிப்பதற்குரிய விதிமுறைகள்:**

- **இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 31.12.2023.**
- இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும்.
- இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு, கையேடாக (Booklet) தயார் செய்து தமிழ் (ம) ஆங்கிலத்தில் அச்சு செய்யப்பட்டு தலா 2 நகல்கள் அனுப்பிட வேண்டும்.

**கையேட்டில் (Booklet) இணைக்கப்பட வேண்டியவை:**

1. பொருளடக்கம் மற்றும் பக்க எண் (index).
2. இவ்விருது பெறுவதற்கு நியமிக்கப்பட்டவரின் உயிர் தரவு (Bio data), சுயசரிதை (ம) passport size photos - 2.
3. ஒரு பக்கம் தனியரை பற்றிய விவரம் (Bulletin points) (தமிழ்-மருதம் மற்றும் ஆங்கிலம்)
4. தேசிய மற்றும் உலகளாவிய விருதுகளின் விவரம் (விருது பெற்றிருப்பின் அதன் விவரம்/ விருதின் பெயர் / யாரிடமிருந்து பெற்றப்பட்டது மற்றும் பெற்ற வருடம்).
5. கையேட்டில் விருது பெற்ற புகைப்படம், சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பக்கங்களுக்கு கொடி வைக்கவும்.
6. சேவை பற்றிய செயல்முறை விளக்கம் (புகைப்படத்துடன்)
7. சேவை பாராட்டி பத்திரிக்கை செய்தி தொகுப்பு.
8. இணைப்பு – படிவம் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) முழுமையாக பூர்த்தி செய்து இணைக்கப்பட வேண்டும்.

**<u>படிவம்</u>**

**<u>தேசிய பெண் குழந்தைகள் தின மாநில விருது - 2024</u>**

| | | |
|---|---|---|
| 1 | பெயர் (ம) மாவட்டம் | |
| 2 | பிறந்த தேதி, வயது (ம) முகவரி | |
| 3 | தந்தையின் பெயர், வயது மற்றும் தொழில் | |
| 4 | தாயின் பெயர், வயது மற்றும் தொழில் | |

| | | |
|---|---|---|
| 5 | தற்போது பயிலும் வகுப்பு | |
| 6 | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | |
| 7 | தனித்திறமை /சாதனைகள் ( 100 வார்த்தைகளுக்கு மிகாமல்) | |
| 8 | விருதுகள் / பாராட்டு பத்திர விவரங்கள் (வருட வாரியாக) 100 வார்த்தைகளுக்கு மிகாமல் | |

**Annexure**

National Girl Child day State Award **- 2024**

| | | |
|---|---|---|
| 1 | Name & District | |
| 2 | Date of Birth, Age & Address | |
| 3 | Name of Father, Age and Occupation | |
| 4 | Name of Mother, Age and Occupation | |
| 5 | Class in which the application studying | |
| 6 | School Name and Address | |
| 7 | Details of Special Skills / Achievements (Not more | |

| | | |
|---|---|---|
| | than 100 words) | |
| 8 | Details of the Awards/ Certificate Received by the Applicant (Year wise) Not more than 100 words. | |